### காவல்துறையினர் நடுநிலையோடு செயல்பட வேண்டும்

# ஸ்டெர்லைட் ஆலை திறக்கக்கூடாது என்று பேசுவது எப்படி குற்றமாகும்?

## * ஆலைக்கு ஆதரவாக அரசு செயல்படுகிறதா?
## * ஐகோர்ட் கிளை நீதிபதிகள் சரமாரி கேள்வி

**மதுரை, ஜன. 31:** ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக்கூடாது என பேசினால் அது எப்படி குற்றமாகும் என ஐகோர்ட் கிளை நீதிபதிகள் சரமாரி கேள்வி எழுப்பினர்.

தூத்துக்குடியை சேர்ந்த மோகன் ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த பொதுநல மனு:

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி கடந்த மே மாதம் நடந்த போராட்டத்தின் போது, போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 14 பேர் உயிரிழந்தனர். ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது போலீசார் பொய் வழக்குகளை பதிந்துதுன்புறுத்தி வருகின்றனர். தூத்துக்குடி வட்டாரத்தில் கடந்த 3 மாதங்களாக பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், விழிப்புணர்வு பேரணி உள்ளிட்ட எவற்றிற்குமே போலீசார் அனுமதி தருவதில்லை. துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக அரசுக்கு எதிராக சிபிஐ,




மற்றும் அருணா ஜெகதீஷ் ஆணையத்திடம் சாட்சி கூறுபவர்கள் மீது பொய் வழக்குப்பதிவு செய்கின்றனர்.

சாட்சி கூறிய சந்தோஷ்ராஜ் என்பவர் மீது போலீசார் பல பொய் வழக்குகளை பதிந்துள்ளனர். போலீசார் சட்டப்படி முறையாக நடக்கவில்லை. எனவே, தூத்துக்குடியில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் 24 மணி நேரமும் வழக்கறிஞர் குழு பணியில் இருக்க சட்ட உதவி மையத்தின் உறுப்பினர் செயலாளருக்கு உத்தரவிட வேண்டும். ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது பொய் வழக்கு பதிந்து, சட்டவிரோதமாக கைது செய்வதை தடுக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு கூறியிருந்தார்.

இவ்வழக்கு நீதிபதிகள் சசிதரன், ஆதிகேசவலு ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தூத்துக்குடி மாவட்ட எஸ்பி நேரில் ஆஜராகி அறிக்கை தாக்கல் செய்தார்.

அதனை பார்த்த நீதிபதிகள் கோபமடைந்து, “காவல்துறையினர் நடுநிலையோடு செயல்பட வேண்டும். ஒருதரப்பினருக்கு சார்பாக செயல்படக்கூடாது. ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக்கூடாது என பேசினால் அது குற்றமா? அப்படியெனில் ஸ்டெர்லைட் ஆலையை திறக்க வேண்டுமென கூறுபவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? காவல்துறையின் அறிக்கையை பார்க்கும்போது, ஸ்டெர்லைட் ஆலைக்கு சாதகமாக செயல்படுவது போல் தெரிகிறது. ஒருபுறம் ஸ்டெர்லைட் ஆலையை மூடுவோம் என்று அரசு கூறுகிறது. மற்றொருபுறம் ஆலைக்கு எதிராக கருத்து தெரிவித்தால் கைது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது என்ன நிலைப்பாடு? ஸ்டெர்லைட் போராட்டம் தொடர்பாக ஐகோர்ட், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டால், அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல்முறையீடு செய்வது ஏன்?” என கருத்து தெரிவித்த நீதிபதிகள், ஸ்டெர்லைட் ஆலை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக மைக்கேல் ஜீனியஸ், சந்தோஷ்ராஜ் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் நகல்களை தாக்கல் செய்ய, தூத்துக்குடி மாவட்ட எஸ்பிக்கு உத்தரவிட்டு வழக்கை பிப். 14ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

தினகரன்
Thu, 31 January 2019
https://epaper.dinakaran.com/c/36262301